**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : STC 189/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW2/PW- 2 | Village: |
| Name | : ஸ்ரீதரன், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் | Age : |
| | | Taluk : |
| Father's/Husband's Name | : | |
| | | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/07/2022**

சாட்சியை கும்பகோணம் மதுவிலக்க அமலாக்கப்பிரிவு காவலர் திரு.சுரேஷ் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சாமிமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 26/09/2015 ம் தேதி நான் கும்பகோணம் மதுவிலக்க அமல்பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, காவல் ஆய்வாளர் முருகவேல் என்பவரது தலைமையில் நானும், தலைமை காவலர் ரமேஷ் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக திருநீலக்குடி காவல் சரக எஸ் புதூரில் வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த TN 38 BT 5338 என்ற பதிவெண் கொண்ட chevrolet tavera காரில் வந்தவர்கள் எங்களை கண்டதும் தப்பிக்க முயன்றார்கள். அவர்களை பிடித்து விசாரித்தபோது, அவர்கள் சிவகுமார், சம்பத்குமார் என்பது தெரிய வந்தது. மேற்படி சிவகுமார், சம்பத்குமார் ஆகியோர்களை என்னால் பார்த்தால்

அடையாளம் காட்ட முடியும். (**எதிரிகள் சிவகுமார், சம்பத்குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாமல் அவர்களது வழக்கறிஞரால் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரில் இருந்திருந்தால் சாட்சிஅவர்களை அடையாளம் காட்டியிருப்பார்.** ) அவர்கள் வந்த 4 சக்கர வாகனத்தை சோதனை செய்தபோது காரில் 1லி அளவுள்ள எம்சி டிராவலர் பிராந்தி பாட்டில்கள் -4 மற்றும் தலா 500 மிலி அளவுள்ள 20 டின் பீர்கள் இருந்தது. மேற்படி பிராந்தி மற்றும் பீர்கள் பாண்டிச்சேரி மாநிலத்தை சேர்ந்தது என்பதாலும், அதனை வைத்திருப்பதற்கு அவர்களிடம் அரசு அனுமதி இல்லாததாலும், அவர்களை காரணம் கூறி கைது செய்து அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் மேற்படி பிராந்தி பாட்டில்கள் , டின் பீர்கள், காரினை எனது மற்றும் எங்களுடன் வந்த தலைமை காவலர் ரமேஷ் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். பின்னர் ஆய்வாளர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜராகி அன்றையதினம் மாலை 05.00 மணிக்கு நிலைய குற்ற எண்.591/2015 ல் சட்டபிரிவுகள் தமிழ்நாடு மதுவிலக்கு சடடம் பிரிவு 4(1) (a) (Transport) ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். (**வழக்கு சொத்துக்களை குறியீடு செய்வதற்காக அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.** )

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**